DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | | | |
|---|---|---|---|---|
| Calender | : | CC No. 206/2022 | | |
| Miscellaneous | : | | | |
| Preliminary Register | : | | | |
| Sessions | : | | | |
| Deposition of Witness for Prosecution | : | L.W.1 | P.W.1 | |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | சினேகா | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | கார்த்திக் | ஜாதி | : |
| கிராமம் | : | | இனம் | : |
| தாலூக்கா | : | | வயது | : |
| Mail ID | : | | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 09.03.2026.

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது மடத்துக்குளத்தில் வசித்து வருகிறேன். எனது சொந்த ஊர் ராமநாதபுரம் ஆகும். கார்மென்ட்ஸ்ஸிற்கு வேலைக்கு சென்று வருகிறேன். எனக்கு கார்த்திக் என்பவருடன் திருமணம் நடந்து 5 வருடங்கள் ஆகிறது திருமணம் ஆன 3 மாதத்தில் பிரிந்து விட்டோம். நான் 11 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. என்னை யாரும் எந்த தொழிலிலும் ஈடுபடுத்தவில்லை. அதற்காக பணம் எதுவும் கொடுக்கவில்லை. நான் என் நண்பர் சுகன்யா என்பவரின் வீட்டில் இருந்தேன். போலிசார் என்னை கைது செய்யவில்லை. காவல் நிலையம் அழைத்து சென்று விசாரித்து அனுப்பிவிட்டார். என்ன வழக்கு என்ற விவரம் தெரியாது.

**சாட்சி அரசு தரப்பு சார்ந்து சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

என் கணவர் என்னை விட்டு பிரிந்து விட்டதால் குடும்ப சூழ்நிலை கருதி

நான் பானுப்பிரியா அக்காவுடன் அடிக்கடி அவரிடம் குடும்ப கஷ்டத்தை சொன்னபோது ஆண்களுடன் உல்லாசமாக இருந்தால் கிடைக்கும் பணத்தில நான் கொஞ்சம் எடுத்துவிட்டு உனக்கு தருகிறேன் என்று ஆசை வார்த்தை கூறினார் என்றும், அதை நம்பி 24 5 2019 ஆம் தேதி பானுப்ரியாவின் வீட்டிற்கு சென்று இருந்த போது, அவர் ஆயிரம் ரூபாய் தருவதாக என்னிடம் வாடிக்கையாளர்களை அனுப்பி வைத்தார் என்றும் இதை தொடர்ந்து செய்து கொண்டிருந்த போது 6 6 2022-ம் தேதி ஆலன் என்பவர் வீட்டுக்கு வந்ததும் எனக்கு 1000 ரூபாய் கொடுத்துவிட்டு என்னை அனுப்பி வைத்தார் என்றும், அந்த சமயத்தில் போலீசார் சோதனை செய்து போது நான் பிடிபட்டேன் என்றும், நான் பாதிக்கப்பட்டவர் என்பதால் என்னை விசாரித்து அனுப்பி வைத்தார்கள் என்றும், இது சம்பந்தமாக போலீசார் விசாரித்த போது விபச்சார தொழில் என்னை ஈடுபடுத்தினார்கள் என்று வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்சமயம் வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்று எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala , B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.